# கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 ஜுலை மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 12.07.2018–ந் தேதி மாலை 3.00 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**பொருள் : 1**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்2145/2016/பி1 நாள்.06.10.2016–ன் படி கீழக்கரை அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகள் பாதுகாவலர்கள் "SHORT STAY HOME AS SPECIAL SHELTER" தஙகுமிடம் கட்டுவதற்கு (SPECIAL SHELTER) ரூ.45.00 இலட்சத்திற்கு திட்டப்பிரேரனை (DPR) சென்னை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்காணும் திட்டம் தொடர்பாக சென்னை,நகராட்சி நிர்வாக ஆணையர்,அவர்களின் கடிதம் ந.க.எண்.38038/2013/UPA2 25.06.2018–ன்படி சென்னை,நகராட்சி நிர்வாக ஆணையகரத்தில் 05.07.2018–ந் தேதி நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் தெரிவித்துள்ளதற்கிணஙக, கீழக்கரை அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகள் பாதுகாவலர்கள் "SHORT STAY HOME AS SPECIAL SHELTER" 30 நபர்கள் தஙகுமிடம் கட்டுவதற்குரிய திருத்திய திட்டப்பிரேரனை ரூ.52.00 இலட்சத்திற்கு தயார்செய்யப்பட்டது, மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.1118/ 2016/ இ1)**

**அலுவலக குறிப்பு :**

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.403** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 ஹைராத்துல் ஜலாலியா மேல்நிலைப் பள்ளி பின்புறம் அமைக்கப்பட்டுள்ள 6'' PVC கழிவுநீர் குழாய்கள் மிகவும் பழுதடைந்து, கழிவு நீர் வெளியேறுகிறது. இதனால் பொதுமக்களுக்கு தொற்று நோய் பரவும் சூழ்நிலை உள்ளது. மேலும் கிழக்குதெரு 4–வது குறுக்கு சந்தில் 6'' PVC கழிவுநீர் குழாய்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை சரிசெய்து இப்பகுதியில் அச்சுகல் சாலை (Paver Block) பதிக்கும் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.4,90,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பணிகளை பொதுசுகாதார அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினஙகள் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டி மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 726 /இ1/2018)**

**அலுவலகக் குறிப்பு:**

1. பொதுசுகாதார அவசிய அவசரம் கருதி இப்பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் ரூ.4,90,000/- மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.404**</u> அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 3</u>

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை நகராட்சி வட்டம், காஞ்சிரங்குடி குரூப், நத்தம் சர்வே எண்.460/3A Part தற்போதைய நத்தம் சர்வே எண்.460/3A K தாவா நிலம் சம்பந்தமாக, இராமநாதபுரம் சார்பு நீதிமன்ற வழக்கு ஓ.எஸ் எண்.131/2017 நடைபெற்றுவருகிறது. மேற்கண்ட தாவா புலம் கீழக்கரை நகராட்சிக்குட்பட்டது என்பதால், கீழக்கரை நகராட்சி அலுவலக Standing Keyering மூலம் வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் வழக்கிற்கு வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டதற்கும் எதிர்வாதுரை (COUNTER AFFIDAVIT) தாக்கல் செய்யப்பட்டதற்கும் இந்நகராட்சி சார்பாக ஆஜராகும் வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் அவர்களுக்கு வழக்குக் கட்டணம் ரூ.15,000/- மட்டும் வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

வழக்கு கட்டணம் ரூ.15000/- வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.
<u>**தீர்மானம் எண்.405**</u>அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 4</u>

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களால், இந்நகரில் ONC (Onsite Compost yard) அமைக்கப்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது. நகரில் அந்தந்த பகுதிகளின் உருவாகும் மக்கும் குப்பைகளை (WET WASTE) அப்பகுதிகளிலேயே உரமாக்குவதற்கு (Ring Composting) அமைத்து உரமாக்கலாம். அதற்கு நகராட்சி பகுதிகளின் நான்கு இடஙகளில் 36 உறை செட்கள் மற்றும் இரும்பு மூடிகள் அமைத்து தருமாறு துப்புரவு ஆய்வாளர் (பொ) அவர்களால் கோரப்பட்டுள்ளது. மேற்காணும் பணிகளை பொதுசுகாதார அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்ளும் பொருட்டு உத்தேச செலவீனம் ரூ.1,30,000/- க்கு தயார் செய்யப்படுள்ள மதிப்பீட்டிற்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற அனுமதி வேண்டி மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

<u>**(கோப்பு எண். 714/இ1/2018)**</u>

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. பொதுசுகாதார அவசிய அவசரம் கருதி இப்பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் ரூ.1,30,000/- மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.406**</u> அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 5**

கீழக்கரை நகராட்சிக்கு உட்பட்ட கீழக்கரை குரூப் சர்வே எண்.229/2A2, 229/3A2, 229/3B1, 229/4–ல் மனைப்பிரிவு தானாக பிரிக்கப்பட்டு உள்ளதை அரசானை எண்.78 மற்றும் 172 வீட்டு வரி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை 04.05.2017 மற்றும் 13.10.2017–ன்படி அனுமதியற்ற மனைப்பிரிவை திரு.செய்யது முகம்மது சலாஹீத்தீன் என்பவர் அனுமதி கோரியதின்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) சிவகஙகை அவர்களின் செயல்முறை உத்திரவு ம.வ.வ.மு/ந.ஊ.து.இ (சி.ம) எண்.342/2018 நாள்.31.05.2018–ல் மொத்த மனைகள் எண்ணம் அஙகீகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் உள்ள சாலைகள் மற்றும் பூஙகா இடஙகளை நகராட்சிக்கு தான பத்திரம் எழுதி கொடுக்கவும் மேற்படி உத்திரவில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிய முறைப்படுத்தல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் பெற்றுக் கொண்டு மேற்படி மனைபிரிவில் கண்டுள்ள மனைகளை வரன்முறைப்படுத்தி இறுதி ஒப்புதல் வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 232 /2018/எப்1)**
**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைபிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகாளான சாலை மற்றும் பூஙகா இடத்தினை நகராட்சியின் பாரமரிப்பில் எடுத்து கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.407** அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர் (கூ.பொ)
கீழக்கரை நகராட்சி